I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.2
M.C.O.P.NO.653/2019

| | | |
|---|---|---|
| Name | : | Dinakaran |
| Father Name | : | Haridass |
| Age | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.10.2025

**விசாரணை தொடங்கிய நேரம் : 04.25 p.m**

**இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் B.A., ஆங்கிலம் படித்திருக்கிறேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் உண்மையென்று உறுதியளிக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

ம.சா.ஆ. 7– இறந்தவரின் ஓட்டுனர் உரிமம் அசல்

ம.சா.ஆ. 8– என்னுடைய ஆதார் கார்டு நகல்(அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டு அசல் சாட்சியிடம் திருப்பி வழங்கப்பட்டது)

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள ஓட்டுனர் உரிமம் இவ்வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றும் இதன் உண்மைத்தன்மையை

சம்மந்தப்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலரை விசாரித்தால் தான் தெரிய வரும் என்று சொன்னால் அது சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. கேள்விபட்டு தான் தெரிந்து கொண்டேன். நான் கேள்விப்பட்ட வரை இந்த விபத்து இரண்டு இருச்சக்கர வாகனங்கள் நேருக்கு நேர் மோதி கொண்டதால் ஏற்பட்ட விபத்தாகும். என் தந்தையார் மீது தான் முழு தவறு என்றாலும் எதிர்மனுதாரர் வாகனமான TN 73 S 9470 மீது எந்த தவறும் இல்லை என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :** 04.30 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2025.10.27 17:26:53 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.